
மட்டக்களப்பு
சூழல்
விழிப்புணர்வு
மாசிகை

# சூழல் சுடர்

சித்திரை 1995 ❁ "மன்று", 16, புனித மிக்கேல் வீதி, மட்டக்களப்பு. ❁ 28



மட்டக்களப்பு மாவட்டச் சூழல் மகத்துவம் விளக்கப்படவும், சூழலிலுண்டாகும் தாக்கங்களை வெளிக்கொணரவும் "சூழல் விழிப்புணர்ச்சி மன்றம்" இவ்விதழை மாதம் ஒருமுறை விரிக்கிறது.

கொப்புகள் இலைகள் விடாக
பறவைகள் கிளிகள் உறவாட
இயற்கையின் அருளால்
அவர்களுக்கு
இல்லிடம் இங்கு நானாவேன்
நண்டுகள், மீன்கள் களைப்பாற
அரண்களும் அமைத்தேன்
வேராலே
இறால்கள் எல்லாம் ஒழிந்தோட
மறைவிடம் அமைத்து நான்
தருவேன்

ஆசிரியர் குழு

| | |
|---|---|
| திரு. கா. நடராஜா | செல்வி கு. ஜசிந்தா |
| திருமதி வி. இராமச்சந்திரா | திருமதி யோ. புவனேந்திரன் |
| திரு. யோ இ. கிறிஸ்ரோபர் | செல்வி க. லீலா |

## உள்ளடக்கம்

ம மா சூழல் பாதுகாப்புச் சட்டம் 2
திரு. யோ. இ. கிறிஸ்ரோபர்
சற்று நில் மனிதா 3
செல்வி து. சந்திரா
சிறகொடிந்த கிராமம் 3
செல்வி சா. யோகேஸ்வரி
மரமுந்திரிகைச் செய்கை 4
திரு. கு. சண்முகம் (ஆசிரியர்)
இயற்கைப் பூச்சி கொல்லிகள் 5
திரு. பா. பரசுராமன்
கண்டு பிடியுங்கள் பரிசு உங்களுக்கே 5
சுற்றுச்சூழல் பாதுகாப்பு நிறுவனம், உலக சுகாதார
நிறுவனம், உலகஉணவு நிறுவனங்களின் அறிவுறுத்தல் 6
திரு. ச. ஜெ. றொபேட்
இம்மாத செய்திச் சுடர் 8



### தை மாதப் போட்டி முடிவுகள்

1ம் இடம் - செல்வி சி. பத்மா மட்/மண்டூர் மகா வித்தி. மண்டூர்

2ம் இடம் - செல்வி பொ. அகிலாதேவி இல. 46, இராசதுரைக் கிராமம், ஆரைப்பற்றை.

3ம் இடம் - செல்வி யோ. சுவானி இராசதுரைக் கிராமம், ஆரைப்பற்றை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு மாவட்டத்தில்

# சூழல் பாதுகாப்புச் சட்டம்

திரு. யோ. இ. கிறிஸ்ரோபர்

மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது சிவில் நிர்வாகம் நடைபெறுகின்றது. பிரதேச சபை, நகர சபைத் தேர்தல்கள் நடத்தப்பட்டு நிர்வாகங்கள் பன்முகப்படுத்தப்பட்டுள்ளன. அரச அதிபரின் பணிகள் பிரதேச செயலாளர்களூடாக நிர்வகிக்கப்படுகின்றன. ஆம், இவை யாவும் இருந்த போதிலும் சூழல் பாதுகாப்புச் சட்டங்களைப் பொறுத்தமட்டில் எவ்வளவு தூரம் நிர்வாகங்கள் இச் சட்டங்களை அமுல் நடத்தக்கூடிய முறையில் இயங்குகின்றன என்பதை நாம் அறிவது நலம் என எண்ணுகின்றேன்.

**சட்ட அமுலாக்கல் சபைகள்**

சுற்றாடல் பாராளுமன்ற அலுவல் அமைச்சின் மத்திய சுற்றாடல் அதிகார சபை ''குறைந்த அளவில் மாசு ஏற்படுத்தும் கைத்தொழில்களுக்கான மாசுக் கட்டுப்பாடும் சுற்றாடல் பாதுகாப்பு உத்தரவுப் பத்திரம் வழங்குவதும் பற்றிய உள்ளூராட்சிச் சபைகளுக்கான வழிகாட்டு நெறிகள்'' என்ற அறிவுறுத்தல்களை உள்ளூராட்சிச் சபைகளுக்கு அனுப்பி அதனூடாக ஒரு சில சட்டங்களை நெறிப்படுத்த முனைகின்றது. அதே நேரத்தில் உள்ளூர் வளங்களின் முகாமைத்துவத்தை பிரதேச செயலகங்களினூடாக அமுல் நடத்துகின்றது. இது இவ்வாறிருக்க அரச அதிபரின் தலைமைத்துவத்தின் கீழ் மாவட்ட சட்ட அமுலாக்கல் குழு ஒன்றும் இயங்குகின்றது. வனபரிபாலன சபையும், வனவளப் பாதுகாப்புச் சட்டங்களை அமுல் நடத்துவதில் பங்களிக்கின்றது. பிரதேச செயலகமும் பிரதேச சபையும் இணைந்து சுற்றாடல் பாராளுமன்ற அலுவல் அமைச்சின் அறிவுறுத்தலுக்கிணங்க சுற்றாடல் ஊக்குவிப்புக் குழு அமைத்து சுற்றாடல் பிரச்சினைகளுக்கு தீர்வுகளைக் காண முயலுகின்றது.

மத்திய சுற்றாடல் அதிகார சபை, மட்டக்களப்பு மாநகர சபையில் இருவரும், மண்முனைப் பற்றுப் பிரதேச சபை, காத்தான்குடி பிரதேச சபை, ஏறாவூர் பிரதேச சபை என்பனவற்றில் ஒவ்வொருவர் வீதம் ஐந்து சுற்றாடல் அதிகாரிகளையும் நியமித்துள்ளது. இத்துடன் சகல உள்ளூராட்சிச் சபைகளிலும் பொதுச் சுகாதார உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

**என்ன பயன்?**

சகல சூழல் சுற்றாடல் கூட்டங்களிலும் பிரச்சினைகள் இனங்காணப்படுகின்றன. ஆனால், தீர்வு நடவடிக்கைகள் எடுப்பதில் தாமதங்களும், தடங்கல்களும் ஏராளம், ஏராளம். மேற்கூறப்பட்ட சபைகள் இருப்பினும், சட்ட அமுலாக்கல் அதிகாரங்களைப் பிரயோகிப்பதற்கு பாதுகாப்புப் பகுதியினரின் ஒத்துழைப்பும் உதவியும் மிக அவசியமாகின்றது. ஆனால், அவர்களே சட்டங்களை மீறும் பொழுது அல்லது பராமுகமாக இருக்கும் பொழுது செவிடன் காதில் சங்கூதிய கதையாகவே இருக்கின்றது.

**ஒரு சில உதாரணங்களை எடுப்போம் -**

மண்முனைப்பற்றில் மண் அகழ்வு அனுமதியின்றி நடைபெறுவதனால் அதனைத் தடை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கும்படி பிரதேச செயலாளரால் பொலிஸ் அதிபருக்கு 24-11-94, 22-12-94, 5-1-95, 7-4-95 திகதிகளில் முறைப்பாட்டுக் கடிதங்கள் அனுப்பப்பட்ட போதிலும் மண் அகழ்வு எல்லோரும் காணக்கூடிய வகையில் நடைபெறுவது மட்டுமல்ல பாதுகாப்புச் சோதனைச் சாவடிகள் ஊடாகக் காத்தான்குடிக்கு எடுத்துச்செல்லப்படுகின்றது. பாதுகாப்பு தடைச் சட்டத்தைத் தவிர சாதாரண சட்டங்கள் பற்றிய அறிவு புதிய பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

இது பற்றிய முறைப்பாடுகள் பிரதேசசபைத் தவிசாளரினால் தொலைபேசி மூலம் பொலிசாருக்குப் பல தடவைகளில் தெரியப்படுத்தியும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

நாமும் அரச அதிபருக்கு 25-11-94, 20-3-95 திகதிகளில் முறையிட்டுள்ளோம் - நடவடிக்கை?

காத்தான்குடிப் பிரதேச சபை தங்கள் பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசத்தில் மண் அகழப்படுவதைத் தடை செய்து தீர்மானம் எடுத்துச் செயற்படுத்துகின்றது. ஆனால், அனுமதியின்றி அகழப்பட்ட மண் வேறு பிரதேச சபைப் பகுதிகளில் இருந்து காத்தான்குடிக்குள் வருவதைத் தடை செய்வதாக இல்லை.

(தொடர்ச்சி 7ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைச் சுடர்

## சற்று நில் மனிதா!

ஆக்கம் : செல்வி து. சந்திரா, தடாகம், சந்திவெளி.

ஓ! மனிதா,
உன்
குருட்டுச் சிந்தனைகளைக்
கொழுத்தி விட்டு வா!
வந்து பார்;
வளப்பு மிகு நம் பூமி
வாடிக் கிடப்பதை!

ஓ!
மண்ணை மாதா என்று
நீ —
மறந்து விட்டாயா?
அவள் —
ஈரநெஞ்சுக்கு
ஈட்டி எறிவதுதான்
உன்
இதய வேட்கையா?

வந்து பாரடா!
வான வெளியிலே —
ஓட்டை.
வனங்களிலே —
அக்கினிச் சுவாலை;
கன்னங்கரேல் என்று
புகை கக்கும்
தொழிற்சாலை;
நடை பயிலும் நதிகளிலே
இரசாயனக் கழிவுகள்;
சமுத்திரப் படுக்கைகளில்
கனிய நெய்ப் படிவுகள்;
இத்தனைக்கும் காரணம் —
உன்
இரக்கமற்ற செயற்பாடேடா

அண்ணாந்து பார்;
வளிமண்டலத்தை மாசு செய்யும்
போர் விமானங்கள்;
குனிந்து பார்;
குவலயத்தையே குலை நடுங்கச்
செய்யும் —
ஆயுதச் சுரங்கங்கள்.

ஓ! மனிதா — உன்
சுய நலன்களை
உரித்து விட்டு
பிறர் நலனைச்
சற்றே நீ எண்ணிப் பார்!

மரங்கள் நமது
உயிர் ஆடைகள்;
அவற்றுக்கு
நேசக்கரம் நீட்டு!

ஐம்பூதங்களும் —
உன்,
அன்புத் தோழர்கள்...
ஆதலால்,
இயற்கையை நீ —
இதமாக நேசி!
நேசி .. நேசி
நிஜமாக நேசி!
இனியாவது
சூழலை நேசி!

---

## சிறகொடிந்த கிராமம்

ஆக்கம்: செல்வி சா. யோகேஸ்வரி, ஆண்டு 11, மட்/மண்டூர் மகா வித்தியாலயம்.

நேர்த்திக் கடன் வைத்த
அப்பாவி ஆடுபோல ..
விக்கி ஏங்கி...
முகம் விறைத்தது போல் நிற்கும்
எங்கள் கிராமம்
இப்போ
சிறகொடிந்த கிராமம்!

பூனைகளும் புற்றுப்பாம்புகளும்
புலிகளும் மான்களும்
தங்கும் காடுகளை
இவைகளின் வீடுகளை
எங்கும் அழித்தொழித்தால்
என்ன நட்டம் வரப்போகிற
தென்று
ஈவு இரக்கமின்றி எங்கள்
இயற்கை அன்னையின்
எழிலான ஆடைகளை
காடுகளைக் களையச்
சொன்னார்கள்
கத்தி கோடாலி
கோசமிட்டுக்
களையப்பட்ட
காடுகள்
இல்லை இல்லை...
இயற்கையின்
ஆடைகளை
இழந்த அன்னையவள்
பரிதவித்துப் பாவியானாள்
பாமர
உடையிழந்து
பறக்கும்
சிறகொடிந்த பறவையானாள்!

ஆண்டுக்கோர்...
மரநடுகை விழா
அமர்க்களம்... அமர்க்களம்...
நகரங்களில்
நர்த்தனம் ஆடினாலும்...
கிராமங்களில்
போர்க்களம் போர்க்களம்
காடுகளுடன்...
கனரக ஆயுதங்கள்...
வெட்டி வீழ்த்துகிறது ..
ஆண்டுக்கு ஆண்டு
ஆயிரம்
மரங்களை
அழிப்பதும்,
காப்பதும்
அவர் செயலோ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய பாடம்

## மரமுந்திரிகைச் செய்கை

ஆக்கம்: ஆசிரியர் திரு. க. சண்முகம், மட்களுவன்கேணி விவேகானந்தா வித்தியாலயம்.

*(சென்ற இதழ் தொடர்ச்சி)*

**நடுகையின் பின் பராமரிப்பு**

முதல் 3 - 4 வருடங்களிலும் மாடு, ஆடுகளை மேய விடாமல் கவனித்தல் வேண்டும். மண்ணை அடிக்கடி தூர்த்துத் துப்பரவாக வைப்பின் மர முந்திரிகை தானாக வருளம்.

மற்றைய பயிர்களைப் போன்று பசளையிடல், நீர்ப்பாச்சுதல் போன்ற விடயங்களில் அதிக அக்கறை காட்டத் தேவையில்லை.

**காய்த்தல்**

பொதுவாக மரங்கள் 18 — 20 மாதங்கள் சென்றதும் பூத்துக் காய்க்க ஆரம்பிக்கும். ஆயினும், 4 6 வருடங்கள் வரை திருப்தியான விளைவைப் பெற முடியாது. பூக்கள் விரிந்து பிஞ்சு பிடிக்கும் காலத்தில் அடர்த்தியான மழை பெய்யுமாயின் உச்ச விளைவானது பாதிக்கப்படும். பொதுவாக தை, மாசி மாதக் கடைசி தொடக்கம் ஆனி மாதம் வரை பழங்களைப் பெறலாம். பூக்கள் கருக்கட்டிப் பழங்கள் தர அறுபத்திரண்டு நாட்கள் செல்லும்.

**அறுவடை**

சாதாரணமாக ஒரு மரத்திலிருந்து 30 — 45 இறாத்தல் விதைகளைப் பெறலாம். ஆனால், அண்மைக் காலத்தில் ஒரு மரத்திலிருந்து 100 — 125 இறாத்தல் விதைகளும் கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

**நோய்களும், பூச்சி புழுக்களும்**

* வேரையும் தண்டையும் துளைக்கும் சந்துப்புழு முக்கியமானதாகும். இதற்கு இந்தியாவில் ''சிறிய சோட'' எண்ணெயினை பஞ்சில் தொட்டு துவாரங்களை அடைப்பதும், பாதிக்கப்பட்ட பாகங்களை அகற்றுவதும் தொன்று தொட்டு இருந்துவரும் ஒரு நடைமுறையாகும்.
* இலையினையும், பூவினையும் தாக்கும் அத்துப் பூச்சியும், புழுவும் முக்கியமானதாகும். இதற்கு மாலை வேளைகளில் வேப்பிலைப் புகையினை மரங்களில் படரவிடுவதன் மூலமும், மரக்கிளைகளை அசைப்பதன் மூலமும் கட்டுப்படுத்தலாம்.
* டைபாக் (Die-back) என்று கூறும் நோயால் தாக்கமுற்ற பகுதிகளை உடன் அகற்றாவிடில் விரைவாகப் படர இடமுண்டு. ''போடோக்'' கலவையைக் கலந்து விசுறுவதன் மூலம் இதனைத் தடை செய்யலாம்.

**பயன்கள்**

**முந்திரிகை எண்ணெய்**

இது நீரை உட்செல்லாதவாறு தடுப்பதற்காக வள்ளங்களுக்குப் பூசக்கூடிய பாதுகாப்புச் சாயமாகப் பயன்படுகிறது. மேலும், சாயங்கள் செய்வதற்கும் பயன்படுத்தப்படுகின்றது.

பித்த வெடிப்பு போன்ற காயங்களுக்கு சிறந்த மருந்தாக இது பயன்படுகின்றது.

**பழம்**

மரமுந்திரிகைப் பழத்தில் விற்றமின் சீ, சுரற்றீன் போன்றவையுண்டு. இந்தப் பழங்களைப் பீனிசம் போன்ற நோயுள்ளவர்கள் உண்பது சிறந்தது. இப்பழத்தின் சாற்றை நொதிக்க வைத்து வைன் தயாரிக்கலாம். இதைவிட சாறாகவும், ஜாம், பழப்பாணி, சட்னி போன்றவையும் தயாரிக்கலாம்.

**பிசின்**

முந்திரிகை மரத்திலிருந்து வெளியேறும் பொருள் காற்றுப்பட்டதும் பசையாக மாறுகிறது. இது பிசின் எனப்படும். இந்தம் பசையை புத்தகங்கட்டுவோர் அதிகளவில் பயன்படுத்துகின்றனர்.

**மரம்**

பொருட்களை அடைக்கும் பெட்டிகள் செய்வதற்கு இம்மரம் பெரிதும் பயன்படுகிறது. பருத்த மரங்கள் வள்ளங்கள் வெட்டுவதற்கும், காய்ந்த கிளைகள் விறகாகவும் பயன்படுகின்றது.

இதைவிட குளிர்ந்த நிழலையும், குளிர்ச்சியான சூழலையும் தந்து நமது சூழலை வளமூட்டும் இம் மரமுந்திரிகையை நாமும பெருமளவில் நட்டுப் பயன் பெறுவோம்.

## சுற்றாடலைப் பாதுகாக்கத் தவறியமையினால் அரசுக்கு எதிராக வழக்கு

சுற்றாடல் சூழலைப் பாதுகாக்கும் கடமையை நிறைவேற்றத் தவறியதற்காக இந்தோனேஷிய அரசாங்கத்திற்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்குத் தொடுத்திருப்போர்: சூழல் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ள 300 பிரஜைகள் குழுக்களின் கூட்டிணைபபு அமைப்பாக இயங்கும் இந்தோனேஷியாவின் சூழல் ஒன்றியமான 'வல்ஹி' என்ற அமைப்பாகும்.

சட்ட விதிகள் கோருவதுபோல் சுற்றாடல் சூழல் மாசுபடுமா என்பது பற்றி முதலில் ஆய்வினை மேற்கொள்ளாமலும், பரிசீலிக்காமலும் வட சுமத்திராவில் இயங்கும் ஒரு தொழிற்சாலைக்கு சட்ட விரோதமான முறையில் அரசாங்கம் வர்த்தக அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருப்பதாக 'வல்ஹி' எடுத்துரைத்துள்ளது.

ஆதாரம்: விவசாயச் செய்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கைப் பூச்சி கொல்லிகள்

ஆக்கம். பா. பரசுராமன் வயல்றோட், சித்தாண்டி.

1. காஞ்சோண்டிக் கிளையை எடுத்து நிழலில் காயவைக்க வேண்டும். காயவைத்த காஞ்சோண்டி ஒரு கிலோவை ஒரு லீற்றர் நீரில் 24 மணித்தியாலத்திற்கு ஊறவிட்டுப் பின் வீட்டுத்தோட்டப் பயிர்களுக்குத் தெளித்தால், பழஈ, தண்டுப்புழு, பூஞ்சனநோய், வேர் முடிச்சு போன்ற நோய்கள் அகற்றப்படுகின்றன. ஒரு லீற்றர் மருந்தை 30 கலன் நீரில் தெளித்தல் வேண்டும்.

2. செப்பு சல்பேற்று துருசு இரண்டு கரண்டி கால் போத்தல் நீரில் இட்டுக் குலுக்கவும். மற்றொரு கால் போத்தல் நீரில் நீர், சுண்ணாம்பு இரண்டு கரண்டி போட்டுக் கலக்கவும். பின் இரண்டையும் சேர்த்துக் கலக்கி, பம்மில் இட்டு நிலத்தை நனைக்கவும். இதனால் நாற்றழுகல், பங்கசு நோய் போன்றவை அகலும். (போடோக் கலவை)

3. 50 கிராம் வேப்பம் பிண்ணாக்குத் தூளை எடுத்து ஒரு லீற்றர் நீரில் 24 மணி நேரம் வரை ஊறவிடவேண்டும். பின் மாலை 4 மணிக்குப் பிறகு தெளித்தல் வேண்டும். இது ஒரு சிறந்த பூச்சி கொல்லியாகும். 24 மணித்தியாலத்தின் பின் இதில் கொழுப்பு உறையும். அதற்கு சவர்க்காரம் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

4. நல்ல செத்தல் மிளகாய் 50 கிராம், வெள்ளைப்பூடு 1 பல், பெரிய வெங்காயம் 5 கிராம் இவை மூன்றையும் சேர்த்து அரைத்து எடுத்து காஞ்சோண்டி ஊறிய நீரில் கலக்கி பம்மில் இட்டு அடித்தால் உவர்ப்பூச்சி, பங்கசு போன்றவை அழிக்கப்படும்.

5. சவர்க்கார நீர், மண்ணெண்ணெய் இவை இரண்டையும் சேர்த்து பம்மில் இட்டு நன்கு கரைத்து விட்டுத் தெளிக்க உவர் பூச்சி அழியும். ஒரு ஏக்கருக்கு இக்கலவை ¾ லீற்றரினை 40 கலன் நீரில் கலந்து பாவிக்கவும்.

6. புகையிலை தண்டு ஊறிய நீரையும், சவர்க்காரம் இரண்டையும் கலந்து அடித்தால் பங்கசு நோய் தீரும்.

7. தக்காளி நாட்டி ஒரு கிழமைக்குப் பின்னர் கிளிசிறியா இலையினைக் கன்றுகளின் இடைவெளியில் இடவும். இவைகளை இரண்டு கிழமைகளுக்கு ஒரு முறை இடல் வேண்டும். இதனைக் காய்க்கும் மட்டும் செய்து வந்தால் பழ அழுகல், இலைச்சுருள் போன்ற நோய்கல் கட்டுப்படும்.

**இரசாயன பீடை கொல்லிகள் பாவிப்பதால் ஏற்படும் தீமைகள்:**

* அறுபது வீதம் நமக்கு நன்மை தரும் அப் பாவிப் பூச்சிகள் கொல்லப்படுகின்றன.
* இருபது வீதம் நோய் ஏற்படுத்தும் கிருமிகள் அழிகின்றன.
* இருபது வீதம் உதவி செய்யும் நுண்ணங்கிகள் அழிகின்றன.

ஆகவே இரசாயனப் பீடை கொல்லிகள் பாவிப்பதால் நோயை உண்டாக்கும் நோய்க் கிருமிகள் அதிகரிக்கின்றன.

சேதன விவசாயத்தின் மூலம் பீடைக் கட்டுப்பாடு தேவையில்லை. எதிரிகளை அழிக்கும் நுண்ணங்கிகளும், பரசைட்டுக்களும் வளர்க்கப்படுகின்றன. இதனால், கூடிய பலன் கிடைக்கின்றன.

## கண்டு பிடியுங்கள்; பரிசு உங்களுக்கே;

### போட்டி இல 09

01. தாவரச் சாற்றையும், மகரந்தங்களையும் மட்டும் உணவாகக் கொள்ளும் நுளம்பினம் எது?
02. உணவுக் குழாயின் நீளம் என்ன?
03. சூரியனுக்கும், வியாழனுக்கும் இடையே புள்ள தூரம் எவ்வளவு?
04. பூக்கள் மகரந்த சேர்க்கைக்குத் தயாரான நிலையில் இருக்கும் நேரமெது?
05. மட்டக்களப்பு மாவட்டத்தின் சராசரி ஆண்டு மழை வீழ்ச்சி எவ்வளவு?
06. தொட்டாச்சுருங்கியில் காணப்படும் புரதத்தின் அளவென்ன?
07. தொட்டாச்சுருங்கியினை எவ்விலங்குக்கு உணவாகக் கொடுக்கவலாம்?
08. தொட்டாற்சுருங்கியினைக் கண்டு பிடித்த நிறுவனத்தின் பெயரென்ன?
09. உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம் எனப் பாடியவர் யார்?
10. 60 - 80 சதவீதம் கமத்தொழில் புரியும் பெண்கள் காணப்படும் நாடு எது?

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆய்வுச் சுடர்

தொகுப்பு; ச. ஜெ. ஜொபேட்

வெளியீடு; யாழ் மாநகரசபை சேதனப்பசளை உற்பத்திப் பிரிவும்; நகர்ப்புற அடிப்படைச் சேவைகள் நிகழ்ச்சித் திட்டப் பிரிவும் (ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம்) இணைந்து வெளியிட்டது.

## மனிதனுக்கு ஏற்படும் இயற்கை அழிவுகளிலிருந்து மீள பூமி இரகத்துடனான ஒன்றித்த இயற்கைச் சூழலே சிறந்த வழியாகும்

## சுற்றுச்சூழல் பாதுகாப்பு நிறுவனம், உலக சுகாதார நிறுவனம், உலக உணவு நிறுவனங்களின் அறிவுறுத்தல்

இன்று நாம் வாழும் பூமியில் எத்தனையோ இயற்கை அழிவுகள் ஏற்பட்டு வருகின்றதென்பதை நாம் பல்வேறு தொடர்புச் சாதனங்கள் மூலமாக அறிவோம். இது மட்டுமல்ல, பூமியில் ஏற்படும் கால நிலைகள் கூட ஒரு சீரற்ற விதத்தில் அமைந்து விட்டன. இவைகளின் அழிவிற்கும், காலநிலை மாற்றங்களுக்கும் யார் காரணமென்றால் பூமியில் வாழும் மனிதர்கள் தான் என்பது விடை.

இன்றைய கொம்பியூட்ட யுகத்திலே மனிதனை விட இயந்திரங்கள் தான் முதன்மை பெறுகின்றன. இவற்றிக்கு இரண்டு பிரதான காரணங்கள் யாதெனில், உலகில் பெருகிவரும் சனத்தொகையும், வளர்முக நாடுகளில் விஞ்ஞான தொழில் நுட்பத்துறையில் ஏற்பட்ட போட்டிகளுமாகும். இவ்விரண்டு காரணங்களினால் தான் இன்று மனிதன் இயற்கை அனர்த்தங்களுக்கு முகம் கொடுக்க வேண்டியவனாகின்றான். அதிகரித்த சனத்தொகைக்குத் தேவையான உணவிற்கு விவசாயத் துறையினை இரசாயன மயமாக்க வேண்டிய தொரு துரதிஷ்டவசமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. அது மட்டுமா? உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்குப் பல பயனுள்ள காடுகளையும் அழிக்கும் நிலை உருவானது. இதனால் இயற்கைச் சூழல், காட்டில் வசிக்கும் விலங்குகள், பறவைகள் இடம்பெயரும் அபாயம் ஆகியன ஏற்பட்டன. விஞ்ஞான, தொழில் நுட்பத்துறையில் ஏற்பட்ட போட்டிகள் காரணமாக பல இலட்சக் கணக்கான தொழிற்சாலைகள் தோன்றின. இத் தொழிற்சாலைகளுக்குத் தேவையான எரிபொருட்களைப் பூர்த்தி செய்ய பல எரிபொருளாக்கிகள் புதிதாகத் தோன்றின. இவற்றின் கழிவுகள் யாவும் கடலில் சங்கமமாகும் சங்கமம் ஏற்பட்டதால் கடலும் மாசடைய வேண்டிய அபாயம் தோன்றியுள்ளது. இதனால், கடலில் வாழும் உயிரினங்கள் பல அழிந்து போயும் கடலை அண்டிய பகுதிகள் அழுக்கடையும் நிலை தோன்றியுள்ளது. இக்காரணங்களினால்தான் ஐ. நா. வின் கிளை ஸ்தாபனமாகிய உலகசுகாதார நிறுவனம்(W.H.O) உலக உணவு, விவசாய நிறுவனத்துடன் (F.A.O) இணைந்து உலக சுற்றுச்சூழல் பாதுகாப்பு சேவைகள் நிறுவனம் (Green Cross International) பல நாடுகளுக்குச் சென்று பூகோளரீதியான ஆய்வுகளை நடத்தி அவற்றின் மூலம் கிடைத்த பெறுபேறுகளை உலகின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளன. அத்துடன் சுற்றுச்சூழல், சுகாதாரம், போஷாக்கு போன்ற விடயங்களுக்கு முக்கிய இடம் கொடுக்கப்பட்டு ஆராயப்பட்டபோது, உலகின் பல நாடுகளிலும் விவசாய அபிவிருத்தி நடவடிக்கைகளில் உயர் விளைச்சலைப் பெற அதிக அளவில் இரசாயன உரவகைகள், கிருமிநாசினிகள் பாவித்ததன் விளைவாக பூமியின் நீர் நில வளங்களில் நச்சுத்தன்மை அடையும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகக் கண்டு பிடித்துள்ளார்கள். இதனால், சிறுவர்கள் அடிக்கடி நோய்வாய்ப்படுவதாகவும், இவர்களுக்கு நோயெதிர்ப்புச்சக்தி குறைந்து போவதாகவும், வளர்ந்தவர்களுக்குப் புற்றுநோய் வரும் ஆபத்துக்குள்ளாக இடமுண்டு என்றும் ஆய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனவே, மேற்படி நிறுவனங்கள் சில அறிவுரைகளைப் பொதுவாக வெயிட்டுள்ளது. அவை என்னவென்றால், உலகில் வளர்ந்துவரும் சனத்தொகை காரணமாக பல நாடுகள் முன்னேற வேண்டிய அவசியமேற்பட்டுள்ளதால் பல துறைகளில் போட்டிகள் ஏற்படுவது தவிர்க்க முடியாததொன்றாகும். முக்கியமாக, விவசாயத்துறையில் கூடிய கவனம் செலுத்தும் இது போன்ற நாடுகள் தமது நாட்டு மக்களின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு பல புதியவகை இரசாயன வகைகளைப் பாவிக்க வேண்டியுள்ளது. இவற்றிலிருந்து ஓரளவுக்கேனும் நாம் நமது சுகாதாரத்தையும், போஷாக்கையும் பேணவேண்டுமானால், ஒவ்வொரு குடும்பமும் தமது குடும்பத்திற்கேற்ப தமது நிலங்களில் தேவையான பயிர்களை பயிரிடுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்வது தான் சிறந்த வழியாகும். தமக்குக் கிடைக்கும் இயற்கைக் கழிவுகளைப் பசளையாக மாற்றிப் பயிர்களுக்கு இடுவதால் குப்பை கூழங்கள் நகரத்தில் தேங்கி நிற்கும் நிலை ஏற்படாது. பொது சுகாதாரம் நல்ல முறையில் பேண வாய்ப்புண்டு. அத்துடன், இரசாயனங்கள் கொண்ட உணவுகளைத் தவிர்த்து தமது சொந்த இடத்தில் பயிர் செய்த பயிர்களின் பயன்களை உண்பதால் போஷாக்கு உள்ளவர்களாகக் காணப்படுவர். அத்துடன், நீர், நில வளம் நன்கு பேணிப்பாதுகாக்கவும் உதவுகின்றது. இது

போன்ற சில நிகழ்ச்சிகளை மேற்குல நாடுகளில் சில தொண்டர் ஸ்தாபனங்கள் நிறைவேற்றியதோடு இதில் வெற்றியும் கண்டுள்ளன. உதாரண மாக ஒருங்கிணைந்த பசளை முகாமைத்துவம் (Intergrated Fertilizer Management) என்ற நிகழ்ச்சியின் கீழ் மேற்குலக நாட்டு மக்களின் தோட்டத்தில் பெறப்படும் கழிவுகளை பசளையாக பயன்படுத்த அறிவுரைகளைப் பல வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் மூலமும், இதற்கென விசேடமாகத் தயாரித்த சில இயந்திரங்களும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அதுமட்டுமல்ல, அங்குள்ள மக்கள் நிலைமையை சரியாக உணர்ந்துள்ளதால் அவர்கள் கூடியளவு தமது தேவையைத் தாமே பூர்த்தி செய்கிறார்கள். மேலும், வீட்டுத்தோட்டங்களில் காணப்படும் பயிர்களைத் தாக்கும் பூச்சி, புழுக்களைக் கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவத்தின் (Intergrated Pest Management) கீழ் பல பாரம்பரிய முறைகளையும், மனிதனையும், பயிர்களையும் பாதிக்காத சில வண்டினங்களையும் அறிமுகப்படுத்தியுள்ளார்கள். இம்முறைகள் மெல்ல மெல்ல விவசாயிகளுக்கும் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றது. இதனால் இரசாயன அளவு குறைக்கப்படுகின்றது. சுகாதாரம், போஷாக்கு மேம்பட்டு நாட்டின் சுமை குறைய வாய்ப்புக்கள் ஏற்படுகின்றது.

ஆகவே, இயற்கை அழிவுகளிலிருந்து நாம் விடுபடக் கூடியளவு பூமிக்கிரகத்தோடு கூடிய இயற்கைச் செயற்பாட்டினை மீண்டும் செயற்படுத்த மேற்குறிப்பிட்ட நிறுவனங்கள் முன்வந்த போதிலும் ஒவ்வொரு மனிதனும் இக்கருத்தை நன்கு உணர்ந்து கொண்டால் மட்டுமே நல்ல முறையில் சில பயன்தரும் விடயங்களை அறிமுகப்படுத்த முடியும். எமது பிரதேசத்திலும் சில முன்முயற்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தாலும். இங்கு வாழும் மக்களாகிய அனைவரும் இதனைக்கருத்திற் கொண்டு கூடியளவு இயற்கைச் சூழலையும், நீர் நில வளங்களை மாசுபடுத்துவதையும் தவிர்ப்பதுடன் எமது சிறுவர்களையும், வருங்கால சந்ததியினரின் அடிப்படை சுகாதாரம், போஷாக்கு மேம்பட ஒவ்வொருவரினது பொறுப்புக்கள் என்பதை மறந்துவிடாது செயற்படுவது நன்று.

எனவே. எமது பிரதேசத்தில் இலகுவில் கிடைக்கும் இயற்கைவளங்களை சேதனப் பசளைகளாக மாற்றி நம்மால் முடிந்தவரை வீட்டுத் தோட்டங்களைச் செய்து நச்சுத்தன்மையற்ற போஷாக்கு நிறைந்த பயன்களைப் பெற்று நாமும் நமது சமுதாயமும் சுக வாழ்வினை அடைய வழி வகுப்போம்.

சில பிரதான நன்மைகள்

1. மண்ணை வளமாக வைத்திருக்கவும், மண்ணில் வாழுகின்ற மண்புழு மற்றும் நுண்ணுயிர்களுக்கும் பாதுகாப்பு அளித்து அவற்றின் செயற்பாட்டினை அதிகரிக்கச் செய்கின்றது,

2. பயிர்களை, நோயெதிர்க்கும் சக்தியினையும். வீரியமுள்ள பயிர்களாகவும் வளரச் செய்கின்றது.

3. நீர்வளம், நிலவளம், சுற்றுச் சூழல் நச்சுத் தன்மையடைவதைத் தடுக்கின்றது.

4. பாவிக்கப்படும் இரசாயன உரவகைகள், கிருமிநாசினிகளின் அளவுகளைக் குறைக்க உதவுகின்றது.

5. பொது சுகாதார சீர்கேடுகளைத் தடுக்க உதவுகின்றது.

6. பயிர்களில் இருந்து பெறப்படும் மரக்கறி, இலை வகைகள், கிழங்கு பழ வகைகளில் அதிகளவில் உயிர்ச்சத்துக்களும், கனியுப்புக்களும் நிறைந்து காணப்படுவதால் மனிதனுக்கு நோயெதிர்ப்புச் சக்தி கூட்டப்படுகின்றது.

7. பயிர்களுக்கோ, மனிதனுக்கோ எவ்வித அழிவும் ஏற்படாது.

---

மட்டக்களப்பு மாவட்டத்தில்

கரையோரப் பாதுகாப்புச் சட்ட விதிகளின்படி சுண்ணக்கல், பவளப்பாறைகள் அகழ்தல், வைத்திருத்தல், கொண்டு செல்லல், உற்பத்திக்கு மூலப் பொருளாகப் பாவித்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. ஆனால், கல்குடா, பேத்தாளை, வாழைச்சேனை, இறால்ஓடை, காயங்கேணி, நாவற்குடா, கோவிற்குளம், கல்லாறு போன்ற இடங்களில் வெளிப்படையாக உற்பத்திச் சாலைகள் இயங்குகின்றன. உள்ளூர்த் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக உற்பத்தியை மேற்கொள்வதனால் அதனை ஓர் அளவிற்கு ஏற்றுக் கொண்டாலும். தற்போது மேற்கொள்ளப்படும் உற்பத்தி வெளியூர் தேவையைப் பூர்த்தி செய்வதற்காகும்.

சுண்ணாக்காடுகள் களப்பின் கரையோரங்களில் இருப்பதனால் களப்பில் உயிரினங்கள் பெருகும். அத்துடன் மண்ணரிப்பும் கட்டுப்படுத்தப்படும் என்பது சகல மீனவரும் அறிந்ததே. ஆனால், பாதுகாப்புப் படையினர் ஒரு பக்கம் பாதுகாப்புக் காரணங்களுக்காக அழிக்கும் பொழுது நம்மவரும் தொழிலாக விறகிற்கும் வேறு தேவைகளுக்குமாக தொடர்ந்தும் அழித்துக் கொண்டே வருகின்றனர். இதனை யார் தடுப்பர்?

இது இவ்விதமிருக்க புத்தளத்தில் இறால் பண்ணைகளினால் ஏற்படும் சூழல் பாதிப்புப்பற்றி பல அறிக்கைகள், எதிர்ப்புக்கள் எழுந்தும் மட்டக்களப்பில் இறால் பண்ணை தொடங்குவதற்கு முயற்சிப்பவர்களும் புத்தி ஜீவிகள் என்று தங்களை அறிமுகப்படுத்தும் ஓர் அரச சார்பற்ற நிறுவனம் இறால் வளர்ப்பை இங்கு ஊக்குவிப்பது சம்பந்தமாகக் கருத்தரங்கு ஒன்று நடாத்தியது. நம் மாவட்டத்தைக் காப்பவர் யார்?

மரங்கள் வெட்டி அழிக்கப்படல், புகை கக்கும் வாகனங்கள், குப்பைகள் தெருக்கள் எங்கும் கழிவு நீர், இப்படியே அடுக்கிக் கொண்டே செல்லலாம்.

எனவே, யார் சூழலைப் பாதுகாப்பர்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திச் சுடர்

- கண்டி, கண்ணுருவவில், Plant Genetic Resource Centre ஆல் 95 3-10 ஆம் திகதி இயற்கை, பாரம்பரிய விவசாய முறையைப் பயன்படுத்தும் விவசாயிகளின் அனுபவங்களும், கலந்துரையாடலும், விவசாய விஞ்ஞானிகளுடனும் ஆராய்ச்சி யாளர்களுடனும் நடைபெற்றன.
- அக்கரைப்பற்று மகா சக்தி சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவுச் சங்கத்தில் 17-3-1995 அன்று கருத்தரங்கு நடைபெற்றது.
- மீராவோடையில் 16 3-1995 அன்றும், ஏறாவூர்ப்பற்றில் 18 3-1995 அன்றுப் சூழல் மன்றக் கூட்டங்கள் நடைபெற்றன.
- 27 3-1995 அன்று பிரதேச சுற்றாடல் ஊக்குவிப்புக் குழுக் கூட்டம் மண்முனை, வடக்குப் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.
- மாணவ சூழல் மன்றங்களுக்கான இலச்சினை தயாரிக்கும் போட்டியும், கழிவுகளைப் பாவனைக்கேற்ற பொருளாக மாற்றும் கண்காட்சியும் நடாத்தப்பட உள்ளது.
- புதுக்குடியிருப்பு கண்ணகி மகா வித்தியாலய ஆசிரியர் திரு. தேவதாஸ் அவர்களின் தலைமையில் 25 கத்தா மரக்கன்றுகள் வீதியோரம் நாட்டப்பட்டன.
- திகிலிவெட்டை கிராமத்தில் தடாகம், பொதுஜன அபிவிருத்தி மன்றம், பாடசாலை மாணவர்கள் மீனவர்கள் ஆகியோரின் உதவியுடன் 2502 கண்டல் தாவரங்கள் நாட்டப்பட்டன.
- கல்லடி முகத்துவார மீனவர்களின் ஒத்துழைப்புடனும், மீன்பிடி பயிற்சி நிலையத்தின் ஒத்துழைப்புடனும் 200கண்ணா மரக்கன்றுகள் அப்பகுதியில் நடப்பட்டன.
- பெரிய உப்போடை ஆற்றில் திரு. கோபால் அவர்களின் உதவியுடன் 75 கண்டல் கன்றுகள் நடப்பட்டன.

PRINTED MATTER

"மன்று"
16, புனித மிக்கேல் வீதி,
மட்டக்களப்பு:
இலங்கை.

IN24. MR. K. SANMUGAM
THEACHER
NADUVIL THAMBI VEETHY
VANTHARUMOOLAI.

இப்பிரசுரம், மட்டக்களப்பு ஜெஸ்கொம் அச்சகத்தில் அச்சிட்டு,
'மன்று' இணைப்பாளர் யோ. இ. கிறிஸ்ரோபரினால் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org